மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லே.

(இ) வினுவிற்கு விடமில்லே.

Preference in employment for Ceylon repatriates.

* 257 Q.—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any preference in employment is being given to the repatriates from Sri Lanka, who are otherwise qualified ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் காரணமாக ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியக் குடிமக்களுக்கு வேலேவாய்ப்பு அலுவலகம் மூலம் வேலேவாய்ப்பு வசதி அளிப்பதற்காக தொகுதி 11-ன் கீழ் (11) முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கு வேலேவாய்ப்பு அளிக்கிற நேரத்தில் அவர்களது லிஸ்ட் தனியாகப் பரிசீலிக்கப்படுகிறதா? நம் நாட்டில் உள்ளவர்களோடு சேர்த்து பரிசீலிக்கப் படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலே வாய்ப்பு நிறுவனங்களின் மூலம் அவர்கள் பெயர்கள் அனுப்பப்படுகிறபோது முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, may I know the number of Ceylon repatriates who have to be employed in the State ? Also, whether it is not a fact that we are going to have more repatriates from Ceylon on account of the recent agreement entered into a few days ago between the Prime Ministers of India and Sri Lanka ? Also, whether the Government of Tamil Nadu have been consulted before they entered into the agreement and if not, whether this Government have expressed their displeasure that they have not been consulted?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறுர்கள்.

1974 சனவரி 30]

திரு. வை. பாலசுந்தரம்: இலங்கையில் இருந்து வருகிற அகதிகளாகிய தமிழர்கள் வேறு மாநிலங்களிலும் குடியேற்றப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னுடைய துறை வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் பெயர்களை அனுப்புவது பற்றி. தனிக்கேள்வி வேறு துறைக்குப் போட வேண்டும்.

விவசாயக் கல்வி குறித்து ஆய்வு

* 258. வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயக் கல்வி குறித்து ஆய்வு நடத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த ஆய்வுக்கு நிதி உதவி வேண்டி சர்வ தேச அபிவிருத்தி சங்கத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) முதல் (உ) வரை—தமிழ் நாட்டில் வேளாண்மைக் கல்வி வளர்ச்சிக்கு உலக வங்கிகளின் உதவி 6 கோடி அளவுக்கு என்று கூறப்படுகிறது. 5—2—1973 அன்று உலக வங்கியின் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். அதன் பிறகு உதவியின் அளவு 15 கோடிக்கு உயர்த்தப்பட்டது. 9—12—1973 அன்று உலக வங்கியின் பிரதிநிதிகள் தமிழ்நாட்டுக்கு வந்து 3 நாள் பேசினர்கள். இந்த வருடத்தில் நல்ல முடிவு உலகவங்கியிடம் இருந்து வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: விவசாயக் கல்லூரியில் இடம் தேடுகிற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. நம்முடைய தேவையையும் கருதி விவசாயக் கல்லூரியில் அவசரமாக அதிக எண்ணிக்கையை ஏற்படுத்தும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல பிரிவுகள் இருக்கின்றன. பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர், பி.எஸ்.ஸி. ஆர்டிகல்சர், பி.எஸ்.ஸி. என்ஜினியரிங் என்று. இதில் பி.எஸ்.ஸி. என்ஜினியரிங் பகுதியை விரிவுபடுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறது.